முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1046

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.08.2022, புதன்கிழமை

1. ஞான ஜோதியே அரங்கா வாழ்க
ஞான சித்தியே தேசிகா வாழ்க
ஞானபண்டிதன் யானும் உந்தனுக்கு
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது நள்ளி திங்கள்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 25 நாள், 10.08.2022 புதன்கிழமை)
அரங்கனுக்கு ஆற்றல் பெருக உரைப்பேன்
வாசி சித்தி சர்வ யோகங்களும்
வல்லமைபட அரங்கனுக்கு நித்தம் நித்தம்
3. நித்தம் நித்தம் சூட்சும வரங்களும்
நிலமதனில் ஆறுமுகன் யான் வழங்கிவர
உத்தமமாய் அரங்கன் தவம் பூர்த்திதானே
உயர்வாக அரங்கன் வந்த நோக்கமும் பூர்த்திதானே
4. தானுரைப்பேன் இந்த கலியுக மாற்றம்
தவசி அரங்கன் தயவால் வெற்றியாகும்
அவசியம் உலகோர்கள் அரங்கன் திருவடி பற்றி
ஆறுமுகா அரங்கா என ஜெபதபம் செய்துகொண்டு
5. செய்து கொண்டு அரங்கன் தர்மத்தையும்
சித்திகள் தரும் சன்மார்க்க உண்மை நெறியையும்
ஐயம் கொள்ளா தொடர்ந்து ஏற்று அரங்கன் வழி வந்தால்
அகிலத்துக்கு ஞான ஆட்சிக்காலம் பொற்காலமாக
6. ஆகவே மாற்றம் இனிதே கண்டு
அற்புதம் கலியுகத்தில் காணக்கூடும்
கூடவே ஞானயுகமாற்றமாக
குறையில்லாத ஞான ஆட்சிக்காலமாக
7. ஈடேறும் அரங்கன் ஞானத்தாலே
இந்த உலகோர்க்கும் ஞானிகளாக்கும்
ஞானிகளாகும் வாய்ப்பு கிட்டும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–